1972 ஆகஸ்டு 18]

Sale of Tuberculosis seals

* 155 Q.—THIRU P. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether Tamil Nadu has bagged the award for the maximum sale of Tuberculosis seals in the sale campaign for 1970–71–72; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) 1968 முதல் 1972 வரை தொடர்ச்சியாக ஐந்து ஆண்டு களிலும், அனைத்து இந்தியாவிலும் காச நோய் முத்திரைகளை அதிக அளவில் விற்பதற்காகத் தரப்படும் பரிசை தமிழ்நாடு காச நோய் கழகம் பெற்றுள்ளது.

திரு. ஆ. பரந்தாமன் : தமிழ்நாட்டில் காச நோயினால் பாதிக் கப்பட்டிருப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது என்றும் அதற்குப் பதிலாக குஷ்ட நோய் பரவலாகத் தமிழ்நாட்டில் இருக் கிறது என்றும் மத்திய அரசிலுள்ள அதிகாரி ஒருவர் தெரியப் படுத்தியிருப்பது உண்மையா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த விவரம் என்னிடம் இல்லை. காச நோய் குறைகிற காரணத்தினால் அதற்குப் பதிலாக இது பரவுகிறது என்று சொல்வது தவறு. இந்த நோய் வருவதற்கு ஏதுக்கள் பல இருக்கின்றன. அதைத் தடுப்பதற்கான சாதனை களும் சில இருக்கின்றன.

கண் தானம் செய்தவர்கள்

* 156 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1970-71 1971-72-ம் ஆண்டுகளில் கண் தானம் செய்தவர்கள் முறையே எத்தனை பேர்—மாவட்டவாரியாக?

(ஆ) சிறைச்சாலைக் கைதிகள் யாரேனும் கண் தானம் செய் துள்ளார்களா?